டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.05.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 281 - Madurai | Online Edition

# ஆயுஷ் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் மற்றும் இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

புது தில்லி, மே 27

பாரம்பரிய மருத்துவம், இயற்கை தயாரிப்புகளில் இந்தியாவின் உலகளாவிய தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் நோக்கில், ஆயுஷ் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் மற்றும் இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் (தனிப்பொறுப்பு) இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ், இந்தத் தொலைநோக்குக் கூட்டாண்மைக்காக இரு அமைப்பு களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். ஆயுர்வேதம், மூலிகைகள், இந்திய நறுமணப் பொருட்களை உலகளவில் ஒருங்கிணைப்பதில் இக்கூட்டாண்மை முக்கியப் பங்கு வகிக்கும் என்று அவர் குறிப்பிட்டார். மேலும், இத்திட்டத்தின் கீழ் முன் மொழியப்பட்டுள்ள ‘ஸ்பைஸ் அண்ட் ஹீல்‘ என்ற முன்முயற்சி, ஒட்டு மொத்த ஆரோக்கியம் மற்றும் இயற்கை மருத்துவத் தீர்வுகளில் இந்தியாவை உலகளாவிய தலைவராக நிலை நிறுத்தும் ஆற்றல் கொண்டது என்றும் அவர் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் ‘தற்சார்பு இந்தியா’, ‘உள்நாட்டு தயாரிப்புகளுக்குக் குரல் கொடுப்போம்’ மற்றும் ‘இந்தியாவில் குணப்படுத்துங்கள்’ ஆகிய தொலைநோக்குப் பார்வைகளுக்கு இணங்க இத்திட்டம் அமைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுமதி வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம், கிராமப்புற மேம்பாடு மற்றும் விவசாயிகளின் வருமான

உயர்வுக்கான புதிய வழிகள் திறக்கப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தில் ஆயுஷ் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் தலைவர் டாக்டர் அனுராக் சர்மா, இந்திய நறுமணப் பொருட்கள் வாரியத்தின் செயலாளர் எம் எஸ் மணிவண்ணன் ஆகியோர் கையெழுத்திட்டனர். இதன் மூலம் ஆயுஷ் தயாரிப்புகள், மூலிகைச் சாறுகள், மதிப்பு கூட்டப்பட்ட நறுமணப் பொருட் களின் தரம், சர்வதேச சந்தை மேம்பாடு, ஆராய்ச்சிப் பணிகள் கூட்டாக மேற்கொள்ளப்படும்.

# விவசாயிகள் அடையாள எண் பெற சிறப்பு முகாம்

## வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்

புதுக்கோட்டை, மே 27

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகள் அடையாள எண் பெறுவது தொடர்பான சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குனர் சு.ப.பத்மபிரியா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்து உள்ளதாவது, இந்த சிறப்பு முகாமில் விவசாயிகள் தங்களுடைய நில உடைமைக்குரிய ஆவணங்களான கம்ப்யூட்டர் சிட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண் மற்றும் ஆதார் அடையாள அட்டை ஆகிய ஆவணங் களை கொண்டு வந்து வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை, அலுவலர்களை தொடர்பு கொண்டு விவசாய அடையாள எண் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் இனிவரும் காலங்களில் விவசாய அடையாள எண் பதிவு செய்த விவசாயிகளுக்கு மட்டுமே உரங்கள், விதைகள் மற்றும் மானிய திட்டங்கள், பிஎம் கிசான் திட்டம் தொடர்பான நிதி மற்றும் பயிர் காப்பீடு பதிவு செய்வதற்கும் விவசாய அடையாள எண் பெற்றிருக்க வேண்டும்.

எனவே விவசாயிகள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி 31.5.26 தேதிக்குள் இதுவரை பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இருப்பு வைத்துள்ள விதைகளை விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் பரிசோதனை செய்து கொள்ள அழைப்பு

ஊட்டி, மே 27

தென் மேற்கு பருவ மழை காலத்திற்காக இருப்பு வைத்துள்ள விதைகளை நீலகிரி மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் பரிசோதனை செய்து கொள்ள உதகை, விதைப்பரிசோதனை நிலையம் அழைப்பு விடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவ மழை தொடங்க உள்ளதால் விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் வருகின்ற பருவத்திற்காக தாங்கள் இருப்பு வைத்துள்ள விதை களை உதகை, ரோஸ் கார்டன், தோட்டக்கலை இணை இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் பணி விதை மாதிரியை கொடுத்து விதைப் பரிசோதனை செய்து கொள்ளலாம். இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படு கின்றன. ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- மட்டுமே பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளை கொடுத்து, விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

விதைப்பரிசோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பிரதான காய்கறிகளுக்கான விதை மாதிரியின் குறைந்தபட்ச அளவு பின் வருமாறு : கேரட், காலிப்ளவர், முட்டைகோஸ், ப்ரொக்கோலி, நூல்கோல் மற்றும் டர்நீப் 10 கிராம், பீட்ரூட் மற்றும் முள்ளங்கி 50 கிராம், பீன்ஸ் 450 கிராம், பட்டாணி 250 கிராம், பாலக்கீரை 25 கிராம் ஆகும்.

இவ்வாறு பயிருக்கேற்ப குறைந்தபட்ச விதை மாதிரியை விதை பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதைப்பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் தர மற்ற விதையினால் ஏற்படும் தேவையற்ற செலவுகளை தவிர்த் துக்கொள்ளலாம் என எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

### அடுப்பில்லா பழ உணவுகளின் நன்மைகள்

அடுப்பில்லா சமையலில் பழங்களை அடிப்படையாகக் கொண்ட உணவுகளை உட்கொள்வது பல ஆரோக்கிய நன்மை களை வழங்குகிறது.

● **ஊட்டச்சத்துக்கள் பாதுகாப்பு :** வெப்பம் பயன்படுத்தப்படாத தால், பழங்களில் உள்ள வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் என்சைம்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படுகின்றன.

● **செரிமான மேம்பாடு :** பழங்களில் உள்ள நார்ச்சத்து செரி மான மண்டலத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது மற்றும் மலச்சிக்கலைத் தடுக்கிறது.

● **எடை கட்டுப்பாடு :** இந்த உணவுகள் பொதுவாக கலோரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் இருப்பதால், எடை இழப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு உதவுகின்றன.

● **ஆற்றல் அதிகரிப்பு :** பழங்களில் உள்ள இயற்கையான சர்க்கரைகள் உடனடி ஆற்றலை வழங்குகின்றன.

● **ஆண்டிஆக்ஸிடன்ட்கள் :** பழங்களில் உள்ள ஆண்டி ஆக்ஸிடன்ட்கள் உடலை ப்ரீ ரேடிக்கல் சேதத்திலிருந்து பாது காக்கின்றன. இது நாள்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது.

● **சமையல் எளிமை :** அடுப்பில்லா சமையல் மிகவும் எளிமையானது மற்றும் குறைந்த நேரத்தில் தயாரிக்கக்கூடியது, குறிப்பாக அவசர காலங்களில் அல்லது சமையல் வசதிகள் இல்லாதபோது இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

நாளை தொடரும்...

# மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் இயந்திரமயமாக்கல் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, மே 27

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் அட்மா - மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சிலையாவூரணி கிராமத்தில் மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் இயந்திரமாக்கல் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தைப்பத்துல் ஆசிபா தலைமை தாங்கி மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் இயந்திரமாக்கல் என்பது குறைந்த செலவில் அதிக மகசூல் பெற உதவுகிறது. விதைப்புக் கருவிகள், களைஎடுக்கும் கருவிகள், தெளிப்பு நீர் பாசனம் மற்றும் அறுவடை இயந்திரங்கள் கொண்டு விவசாயிகளுக்கு இயந்திரத்தை பயன்படுத்தி கடைப்பிடிக்கும் தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கமும் மற்றும் அதிக மகசூல் பெற அதன் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். நிலம் தாயரிக்க சட்டிக் கலப்பையைப் பயன்படுத்தி உழுத பின் 3 அல்லது 4 முறை இருப்பு கலப்பை அல்லது நாட்டுக் கலப்பையைக் கொண்டு கட்டிகள் நன்கு உடையும் வரை உழ வேண்டும். குறைந்த ஆழத்தில் மண் கடின அடுக்கு உடைய நிலத்தை உளிக் கலப்பையைக் கொண்டு 50 செ.மீ இடைவெளியில் ஒரு திசையில் உழ வேண்டும். பின்னர் அதற்கு நேர் எதிர் திசையில் உழவேண்டும். மானாவாரி நிலக்கடலையில் விதைப்புக்கு ஆடிப்பட்டம் (ஜுன்- ஜுலை) அல்லது புரட்டாசி பட்டம் (செப்டம்பர் - அக்டோபர்) மிகவும் உகந்தது.

நிலக்கடலை விதைப்பு கருவி கொண்டு விதைப்பதற்கு 40 கிலோ / ஏக்கர் போதுமானது. விதை நேர்த்தி செய்ய ரைசோபியம் 400 மி.லி, பாஸ்போ பாக்டீரியா 400 மி.லி. எண்ணெய் வித்து பயிர்களில் கலந்து விதைக்கவும், வயலில் இடுவதற்கு ரைசோபியம் 800 மி.லி, பாஸ்போபாக்டீரியா 800 மி.லி வயலில் இட வேண்டும். பருவம் மற்றும் உயர் விளைச்சல் இரகங்களான நிலக்கடலை பயிர்களுக்கு (நிலக்கடலை fliy TMV 13, VRI 8,9,10,CO 8தரணி, கதிரிலபாக்சி) இரகங்களை பற்றி குறித்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் குணசேகரன் (வேளாண்மை அலுவலர் ஒய்வு) இயந்திர விதைப்பு டிராக்டர் விதைப்பான்கள் (Tractor seed drill) மூலம் விதைப்பது சிறந்தது. இது வரிசைக்கு வரிசை 30 செ.மீ மற்றும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளி பாரமரிக்க உதவுகிறது.

இயந்திர களையெடுப்பு விதைத்த 25 மற்றும் 40வது நாட்களில் பவர் வீடர் கொண்டு களை களை அகற்றலாம். உர மேலாண்மை தொழில்நுட்பங்களான ஜிப்சம் ஒரு எக்டேருக்கு 400 கிலோ வீதம் 40-45 நாளில் பாசனப் பயிருக்கும் 40-70 வது நாளில் மானாவாரி பயிருக்கும் ஜப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும் என்றும்,வளர்ச்சி ஊக்கிகள் ஏக்கருக்கு 4 கிலோ TNAU - நிலக்கடலை ரிச் பூக்கும் பருவம் (2 கிலோ/ஏக்கர்) மற்றும் காய் பிடிக்கும் பருவம் (2 கிலோ/ஏக்கர்) தெளிக்க வேண்டும்.



5 கிலோ எண்ணெய் வித்து நுண்ணூட்டம் உரம் (அ) 10 கிலோ ஜிங்க் சல்பேட் + 20 கிலோ மணல் கலந்து இட வேண்டும் என்றும் எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார துணை வேளாண்மை அலுவலர் செந்தில், எண்ணெய் வித்து பயிர்களில் நோய் மற்றும் பூச்சி கண்டறியும் முறைகள் மற்றும் மேலாண்மை முறைகள் பற்றியும் நிலக்கடலை சுருள் பூச்சி கட்டுபடுத்த கம்பு மற்றும் திணை பயிர்களை ஊடுபயிராக பயிரிடுதல் விதைப்பு பட்டம் தொடங்கும் முன்பே விதைக்க வேண்டும் என்றும், வேர்ப் புழுவை கட்டுப்படுத்த கோடை உழவு செய்யவும், புகையிலை வெட்டுப்புழு கட்டுபடுத்த விளக்கு பொறி 1 மற்றும் இனக்கவர்ச்சி பொறி 5 எண்கள் பொருத்துதல் வேண்டும். எண்ணெய் வித்து பயிர்களில் ஊடுபயிராக ஆமணக்கு, துவரை போன்ற பயிர்களை பயிரிட வேண்டும் என்று எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் பழனிசாமி, விவசாய அடை யாள அட்டை பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் மற்றும் வேளாண்மைத் துறை மற்றும் இதர துறைகளில் உள்ள திட்டங் களை பற்றி எடுத்து கூறினார். நிலக்கடலையில் அறுவடை இயந்திரங்கள் கொண்டு முதிர்ச்சியடைந்த செடிகளை இயந்திரக் கலப்பைகள் (Groundnut Digger) மூலம் மண்ணிலிருந்து எளிதாக பிடுங்கலாம். நட்ஸ் பிரித்தல், அறுவடை செய்த செடி களிலிருந்து காய்களை தனியாகப் பிரிக்க எலக்ட்ரிக் நிலக் கடலை பிரிப்பான் (Groundnut Pod Stripper) பயன்படுத்தப் படுகிறது என்று கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் சிறு / குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர்ப் பாசனம் மற்றும் மழைத்தூவான் வழங்கப்பட்டு வருகிறது எனவும் வேளாண் இடுபொருட்கள் நுண்ணூட்டம் இடும் முறை பற்றி பேசினார். வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக் கப்படும், திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோ பியம் இவைகளை பயன்படுத்தி பயிர்களில் விதைநேர்த்தி செய் வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உழவர் செயலி பயன் படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். காளையார் கோவில் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் காளிஸ்வரி பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பயறுவகைப் பயிர்களில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வழிகள்

பயறுவகைப் பயிர்களின் குறைந்த விளைச்சல் திறனுக்கு முக்கிய காரணம் பயறு வகைப் பயிர்கள் பெரும்பாலும் மானாவாரி பயிராகவோ, கலப்பு அல்லது ஊடுபயிராகவோ பயிரிடப்படுவதாகும். பயறு வகைப் பயிர்களை தனிப்பயிராக பயிரிடுவது மற்றும் உயரிய தொழில்நுட்பங்களை செயல் படுத்துவதன் மூலம் விளைச்சல் திறனை அதிகரிக்கலாம்.

## உயிர் உரங்களுடன் விதை நேர்த்தி

உயிர் உரங்களான ரைசோபியம் 200 கிராம் (ஒரு பொட்டலம்) மற்றும் பாஸ்போபாக்டீரியா 200 கிராமை (ஒரு பொட்டலம்) 200 மில்லி ஆற வைத்த அரிசி கஞ்சயில் கலந்து அதனுடன் ஒரு ஏக்கருக்குத் தேவையான விதைகளைப் போட்டு, கலவை விதையில் ஒட்டும்படி நன்கு குச்சியால் கலக்க வேண்டும். இவ்வாறு கலந்த விதையை அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். விதை நேர்த்தி செய்யத் தவறினால் ஏக்கருக்கு 800 கிராம் ரைசோபியம், 800 கிராம் பாஸ்போபாக்டீரியாவை (4 பொட்டலம்) 25 கிலோ தொழுஉரம் மற்றும் 25 கிலோ மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன்னால் மண்ணில் இட வேண்டும்.

## நுண்ணூட்ட உரமிடம்

துத்தநாகம், இரும்பு, தாமிரம், மாங்கனீசு, போரான், மாலிப்டீனம் போன்ற சத்துக்கள் பயிருக்கு மிகக்குறைந்த அளவே தேவைப்படுவதால் அவை நுண்ணூட்டச் சத்துக்கள் எனப்படுகின்றன. நுண்ணூட்டத்தை தனி உரமாகவோ அல்லது நுண்ணூட்ட கலவையாகவோ அளிக்கலாம்.

நுண்ணூட்ட கலவையில் பயிருக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்கள் சமச்சீர் முறையில் இருக்கும். ஏக்கருக்கு 2 கிலோ பயறு வகைப் பயிர்களுக்குரிய நுண்ணூட்ட கலவையை தொழு உரத்துடன் 1:10 என்ற விகிதத்தில் (2 கிலோ நுண்ணூட்ட கலவையை 20 கிலோ தொழுஉரத்துடன் கலக்க வேண்டும்) கலந்த ஒரு மாதம் தகுந்த ஈரப்பதத்தில் மூட்டை கட்டி வைத்திருந்து கடைசி உழவின் போது இடவேண்டும்.

## இலைவழி உரமிடல்

செடியின் வேர் வளர்ச்சிக்கும் காய்களில் மணி பிடிப்பதற்கும் மணிச்சத்து அவசியம். மண்ணில் இடப்படும் மணிச்சத்தானது பல்வேறு வகைளில் மண்ணில் நிலைநிறுத்தப்பட்டு பயிருக்கு கிடைக்காது. எனவே, மணிச்சத்தை இலைவழி தெளிப்பதன் மூலம் அதனை பயனை பெறலாம்.

## டி.ஏ.பி உரக்கரைசல்

● ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் டி.ஏ.பி உரத்தை கரைத்து தெளிக்க வேண்டும். இதற்கு முதலில் 4 கிலோ டி.ஏ.பி உரத்தை 20 லிட்டர் நீரில் தெளிப்பதற்கு முந்தைய நாள் மாலை ஊற வைக்க வேண்டும்.

● மறுநாள் ஊற வைத்த கலவையின் தெளிந்த நீரை மட்டும் எடுத்து துணியால் வடிகட்ட வேண்டும்.

● பின்னர் வடிகட்டிய ஒரு லிட்டர் கரைசலை எடுத்து இதனுடன் 9 லிட்டர் தண்ணீர் சேர்த்து நன்கு கலக்கி கைத்தெளிப்பான் (10 லிட்டர் கொள்ளளவு) கொண்டு மாலை வேளையில் செடிகளின் மீது நன்கு படுமாறு தெளிக்க வேண்டும்.

● மறுபடியும் வடிகட்டிய ஒரு லிட்டர் கரைசலை எடுத்து மேற்கூறிய முறையில் தெளிக்க வேண்டும். இவ்வாறு தயாரித்த நீர்த்த கரைசல் 200 லிட்டரை ஒரு ஏக்கருக்கு கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

● டி.ஏ.பி கரைசல் தெளித்த உடன் நீர்ப்பாய்ச்சுதல் மிகவும் அவசியம்.

● இக்கரைசலை பயிரின் 50 சதவிகிதம் பூ பூக்கும் பருவத்தில் ஒரு முறையும், பின்னாட் 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்க வேண்டும்.

## வளர்ச்சி ஊக்கி தெளித்தல்

பயறுவகைச் செடிகளில் பூக்கள் அதிக அளவில் கொட்டிவிடும். பூக்கள் உதிர்வதால் காய் பிடிப்பு குறைந்து விளைச்சல் இழப்பு ஏற்படும். பூக்கள் உதிர்வதைத் தடுக்க 50 சதவிகிதம் பூப்பின் போது லிட்டருக்கு 40 மில்லி என்ற அளவில் பிளானோஃபிக்ஸ் (என்.ஏ.ஏ) என்ற வளர்ச்சி ஊக்கியை கலந்து தெளிக்க வேண்டும்.

## பயறு அதிசயம் (Pulse wonder)

பயறுவகைப் பயிர்களில் பூ உதிர்வதைத் தடுக்கவும், வறட்சியைத் தாங்கவும் பயறு அதிசயத்தை தெளிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 2.0 கிகி பயறு அதிசயத்தை 200 லிட்டர் நீரில் கலந்து தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து பூ பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும். இதனால் பயறு விளைச்சல் 20 சதவிகிதம் வரை கூடும். உயரிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தி பயன் பெறுமாறு திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் ஜெ.பி.சஜிதா தெரிவிக்கிறார்.




# இனிப்பான மாம்பழங்களை தேர்வு செய்வது எப்படி?

முக்கனிகளின் இராஜாவான மாம்பழங்களை தற்போது சீசன் காலத்தில் தான் சுவைக்க முடியும். நன்றாக பழுத்த இனிப்பான பழங்களை எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை விரிவாக பார்ப்போம்.



முதலில் பழக்கடைகளில் எவ்வாறு பழங்களை தேடி எடுக்கும் வழிமுறைகளை பார்ப்போம்.

**1) காம்பு பகுதி**

மாம்பழத்தின் காம்பு பகுதியை முகர்ந்து பாருங்க. அதிலிருந்து அன்னாசி பழம் / மூலாம் பழம் போன்ற பழ வாசனை வெளிப்பட வேண்டும். வாசனை இல்லை என்றால் அந்த பழம் முழுமையாக பழுக்கவில்லை என்று அர்த்தம். புளிப்பு / மது போன்ற வாசனை வந்தால் அந்த பழம் செட்டையாகி விட்டது என்று அர்த்தம்.

**2) அழுத்தி பார்த்தல்**

கட்டை விரல்களால் மாம்பழத்தை மெதுவாக அழுத்தவும். அப்போது விரல் மென்மை தன்மையால் சிறிதளவு அழுத்தத்திற்கு உண்டானால் அது இனிப்பு சற்று நிறைந்த பழமாக இருக்கும். மிகவும் கடினமாக இருந்தால் பழுக்காத புளிப்பு தன்மை கொண்ட பழமாகும்.

**3) எடை அறிதல்**

மாம்பழத்தை கையில் எடுத்தும் கனமாக இருந்தால் சாறு நிரம்பிய இருக்கும். இனிப்பும் குறைவான நார்சத்தும் கொண்டிருக்கும் என்பதை அறியலாம். மாம்பழத்தின் எடை குறைவாக இருந்தால் உள்பகுதி உலர்ந்தும் சுவை குறைந்தும் இருக்கும்.

**4) வடிவம்**

மாம்பழத்தை தேர்வு செய்யும் போது சில குறியீடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த வகை மாம்பழங்கள் உருண்டையான தலைப்பு உள்ள கால் வடிவ கொண்ட பழத்தை தேர்ந்தெடுக்கலாம். தட்டையான மெலிந்த பழங் களை தேர்ந்தெடுக்க கூடாது.

நல்ல திரட்சியான பழங்களை வாங்கி சுவைக்க நல்ல தருணம், அதுமட்டுமல்ல. முக்கனிகளை ஒரு சேர சுவைக்க இந்த கோடை தான் ஏற்றது.

மா, பலா, வாழையை உண்போம். தித்திப்பாக இருப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சின்ன வெங்காயத்தில் திருகல் நோய் கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப மேலாண்மை



பெரம்பலூர், மே 27

பெரம்பலூர் மாவட்டம், சின்ன வெங்காயத்திற்கு மிகவும் பெயர் பெற்ற மாவட்டம். இந்த மாவட்டத்தில் சின்ன வெங்காயம் சராசரியாக 6,500 ஹெக்டர் நிலப்பரப்புக்கு மேல் பயிரிடப்பட்டு வருகிறது. சின்ன வெங்காயத்தில் திருகல் நோய் அடிக்கடி அறியப்படுகிறது. இந்த திருகல் நோயை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்களை வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

சின்ன வெங்காயத்தில் ஆந்திரக்னோஸ் என்ற பூஞ்சையால் திருகல் நோய் மற்றும் கோழிக்கால் நோய் என்று அழைக்கப் படும் நோய், சின்ன வெங்காயம் பயிரிடப்படும் விவசாயிகளுக்கு அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

இந்த நோயாளது அதிக மழை மற்றும் அதிக வெப்பநிலை, காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருந்தாலும், இந்த நோயை ஏற்படுத்தும் பூஞ்சான வித்துக்கள் மிக அதிக அளவில் உற்பத்தி ஆகிறது. இந்த நோயானது, பாசன நீர் பாதிக்கப்பட்ட இடங்களில் பயன்படுத்தப்பட்ட பண்ணை உபகரணங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட விதை குமிழிகள் மூலம் பரவுகிறது. இந்த நோய்களின் அறிகுறிகள், தொடக்கத்தில் வெங்காயத்தாள்கள் வெளிர் மஞ்சள் நிற காயங்களுடன் உருவாகி, நாளடைவில் விரிவடைந்து பரவி அடர் பழுப்பு நிறத்திற்கு மாறி கருப்பு நிற பூஞ்சானங்கள் காணப்படும்.

வெங்காயத்தின் கழுத்து பகுதியில் உள்ள தண்டுகள் தடித்து காணப்படுவதுடன், நாளடைவில் இலை சற்று சுருள தொடங்கி மஞ்சள் நிறமாக மாறும். இந்த நோய் தீவிர அடையும் போது இலைகள் சுருண்டு கீழே விழுந்து விடும். இந்த நோயை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள், மழைக்காலங்களில் வெங்காயம் பயிர் இடுவதை தவிர்க்க வேண்டும்.

நோய் தாக்கம் அதிகம் ஏற்பட்ட வயல்களில் அடுத்த இரண்டு பருவத்திற்கு மாற்றுப் பயிர் செய்வது நல்லது. மாற்று பயிராக நெல் சாகுபடி செய்வது சிறந்ததாக இருக்கும். பயிர் வகை பயிர்களை பயிர்ச் சுழற்சி முறையில் பயிரிடப்படுவதால் இந்த நோயை கட்டுப்படுத்துவதுடன், மண்வளமும் காக்கப்படுகிறது. விவசாயிகள் எப்போதும் நோய் தொற்று இல்லாத தரமான விதை குமிழ்களை வாங்கி பயன்படுத்த வேண்டும்.

அடி உரமாக ஏக்கருக்கு வேப்பம் புண்ணாக்கு 100 கிலோ, ட்ரைக்கோ டெர்மா விரிடி இரண்டு கிலோ, அசோஸ்பைரில்லம் 2 லிட்டர், இவற்றை 50 கிலோ தொழு உரத்துடன், கலந்து பயன்படுத்த வேண்டும்.

நோய் தாக்குதல் அதிகமாக இருக்கும் போது உடனடியாக புரோப்பிக்கோனசோல் மற்றும் தையோப்நெட்மீத்தைல் : 1.5 மி.லி/லி, டெபுகோனசோல் மற்றும் ட்ரைபிளாக்சிஸ்ட்ரோபின் : 1.0 கி/லி, ஃபுளோபைரம் மற்றும் டெபுகோனசோல் : 1.5 மி.லி/லி மேற்கண்ட இந்த மருந்துகளை சுழற்சி முறையில் நோய் தாக்குதல் அறிந்தவுடன் உடனடியாக தெளித்து, சின்ன வெங்கா யத்தில் ஏற்படுகின்ற திருகல் நோய் என்று அழைக்கப்படும் கோழிக்கால் நோயை கட்டுப்படுத்தலாம், என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறினார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்




Toll Free No. 1800 - 4257333

# வெள்ளை சுருள் ஈ உயிரியல், அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு ஒரு பார்வை

### அறிமுகம்

Rugose spiralling whitefly (Aleurodicus rugioperculatus) என்பது பல பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு முக்கிய பூச்சி ஆகும். இது தேங்காய், வாழை, மாமரம், சப்போட்டா போன்ற பயிர்களை தாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது. இலை களின் கீழ்புறத்தில் சுருள் வடிவில் முட்டைகள் இடுவது இதன் முக்கிய தன்மை.




### உயிரியல்

இந்த பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி சுமார் 30–40 நாட்கள் ஆகும்.

### முட்டை நிலை

பெண் பூச்சி இலைகளின் கீழ்புறத்தில் சுழல் வடிவில் 100–200 முட்டைகள் இடும். 5–7 நாட்களில் முட்டைகள் உடையும்.

### நிம் நிலை

நிம் நிலை 4 கட்டங்களைக் கொண்டது. முதல் கட்டம் மட்டும் நகரும். பிற கட்டங்களில் இலையில் ஒட்டிக்கொண்டு சாறு உறியும். இந்த நிலை 2–3 வாரங்கள் நீடிக்கும்.

### பூப்பா நிலை

பூப்பா இலை மீது ஒட்டிய நிலையில் காணப்படும். இது வெள்ளை மெழுகு போன்ற பொருளால் மூடப்பட்டிருக்கும். 7–10 நாட்களில் வளர்ச்சி முடியும்.

### வளர்ந்த பூச்சி

வெள்ளை நிற சிறகுகளுடன் காணப்படும். சிறிய ஈ போன்ற தோற்றம் இருக்கும். ஆயுள் 2–3 வாரங்கள்.

## அறிகுறிகள்

### நேரடி சேதம்

- இலைகளிலிருந்து சாறு உறியும்
- இலை மஞ்சள் நிறமாக மாறும்
- இலைகள் உதிரும்
- செடியின் வளர்ச்சி குறையும்

### மறைமுக சேதம்

- இனிப்பு திரவம் வெளியிடும்
- அதில் கருப்பு பூஞ்சை வளர்ச்சி
- ஒளிச்சேர்க்கை குறையும்
- இலைகள் கருமையாக மாறும்

### சிறப்பு அறிகுறி

- இலை கீழ்புறத்தில் சுருள் வடிவில் முட்டைகள்
- வெள்ளை மெழுகு போன்ற சுரப்பு

## பரவல்

இந்த பூச்சி காற்றின் மூலம், பாதிக்கப்பட்ட நாற்றுகள் மூலம் மற்றும் மனித செயல்பாடுகள் மூலம் வேகமாக பரவுகிறது.

## கட்டுப்பாடு முறைகள்

இந்த பூச்சியை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் அவசியம்.

### கலாச்சார முறைகள்

- பாதிக்கப்பட்ட இலைகளை அகற்றி அழிக்க வேண்டும்
- செடிகளுக்கு சரியான இடைவெளி வைக்க வேண்டும்
- அதிக நைட்ரஜன் உரம் தவிர்க்க வேண்டும்

### உயிரியல் முறைகள்

- பராசிட்டாய்டு : Encarsia guadeloupae
- பிடியான் பூச்சிகள் : லேடிபேர்ட் வண்டு, லேஸ்விங்

### தாவர அடிப்படையிலான முறைகள்

- வேப்பெண்ணெய் 3% தெளிக்கலாம்
- சோப்பு கரைசல் பயன்படுத்தலாம்

### இரசாயன முறைகள்

- இமிடாக்ளோபிரிட்
- தையமேதோக்சாம்
- அசிடாமிப்ரிட்

(இவை கடைசி வழியாக மட்டும் பயன்படுத்த வேண்டும்)

### ஒருங்கிணைந்த மேலாண்மை

- மஞ்சள் ஒட்டும் பலகைகள் பயன்படுத்த வேண்டும்
- வேப்பெண்ணெய் மற்றும் உயிரியல் முறைகளை இணைத்து பயன்படுத்த வேண்டும்
- நிலையான கண்காணிப்பு அவசியம்

### முடிவு

Rugose spiralling whitefly ஒரு தீவிரமான பூச்சி ஆகும். இதை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை பயன்படுத்துவது மிகவும் அவசியம். உயிரியல் முறைகள் நீண்டகாலத்தில் சிறந்த பலனை அளிக்கும்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா.ரா மற்றும் பாமா.ம (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***



# விவசாயிகளுக்கு விதை பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்த ஆலோசனை

திண்டுக்கல், மே.27

விசாயத்திற்கு முதல் முக்கியமான இடுபொருள் விதை. அதிக மகசூல் மற்றும் தரமான விதை உற்பத்திக்கு வித்திடுவது தரமான விதைகளே.

எனவே விவசாயிகள் விதைத்திடும் விதை தரமானதாக உள்ளதா




என ஆய்வு செய்து விதைத்திட வேண்டும் என திண்டுக்கல் விதை பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன் மற்றும் ம.ஜமுனாராணி தெரிவித்துள்ளனர்.

விதையின் தரம் நான்கு முக்கிய காரணிகளை அடிப்படை யாகக் கொண்டது.

1. புறத்தூய்மை 2. முளைப்புத்திறன் 3. ஈரப்பதம் 4. பிறரககலப்பு

விதையின் புறத்தூய்மை என்பது விதைகளில் கலந்து உள்ள கல், மண், தூசி, முதிர்ச்சி அடையாத விதைகள் மற்றும் விதைகளின் உடைந்த பாகங்களை குறிக்கும். இந்த பொருட்கள் விதைகளில் அதிக அளவு கலந்து இருந்தால் விதைகளின் தரம் பாதிக்கப்படும். எனவே விதைகளை புறத்தூய்மை செய்து விதைப்பிற்கு பயன்படுத்த வேண்டும். பொதுவாக விதையின் புறத்தூய்மை 98% இருக்க வேண்டும். அதற்கு குறைவாக இருந்தால் தரமற்ற விதையாகும்.

விதைகளின் ஈரப்பதமானது விதை முளைப்பிற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது மழைக்காலம் என்பதால் விவ சாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை அதிக ஈரப்பதத்துடன் சேமிக்கும் போது பாக்டீரியா, பூஞ்சாணம் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும். இதன் மூலம் விதையின் தரம் பாதிக்கப்படும் சூழல் உருவாகும். எனவே விவசாயிகள் விதைப்பிற்கு அல்லது சேமிப்பதற்கு முன்பாக தங்களிடம் உள்ள விதையின் ஈரப் பதத்தை கண்டறிவது அவசியம். பொதுவாக நெல்லிற்கு 13%, சோளத்திற்கு 12%, பயிறு வகை பயிர்களுக்கு 9%, காய்கறி களுக்கு7% இருத்தல் வேண்டும்.

முளைப்புத்திறன் என்பது மிக முக்கிய காரணியாக கருதப் படுகிறது. பயிர் எண்ணிக்கையை சரியாக பராமரித்து அதிக மகசூலை பெற முளைப்புத்திறன் அவசியம். ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத் திறனானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக நெல்லிற்கு 80%, பயிறு வகை பயிர்களுக்கு 75%, கத்தரி, தக்காளி, கீரை வகைகளுக்கு 70%, பாகல், சுரை, பூசணிக்கு 60% நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் அவை தரம் குறைவான விதையாகும். பிறரக கலவன் என்பது ஒரே பயிரைச் சேர்ந்த வேறு ரக விதைகள் கலந்து இருப்பது ஆகும்.

பயிர் வகைப் பயிர்களுக்கு ஒரு கிலோவிற்கு பத்திற்கும் அதிக மான எண்ணிக்கையிலான பிறரக கலவன் இருந்தால் அவற்றின் தரம் குறைவானதாக கருதப்படும். பிறரக கலவன் இல்லாத விதைகளை தேர்வு செய்து விதைப்பதன் மூலம் விதையின் தரத்தை மேம்படுத்தலாம். எனவே விவசாயிகள் தங்களின் விதையின் தரத்தினை பரிசோதனை மூலம் அறிந்து கொள்ள திண்டுக்கல், உழவர் மைய வளாகத்தில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தை அணுகி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- கட்டணமாக செலுத்திபயனடையலாம். இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

# எண்ணெய் வித்துப் பயிர்கள் சாகுபடியில் உற்பத்தியை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி



அரியலூர், மே 27

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறை மூலம் செயல் படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) எண்ணெய் வித்துப் பயிர்கள் சாகுபடியில் உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்ப பயிற்சி வீரசோழபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தலைமை வகித்துப் பேசுகையில், விவசாயிகள் வேளாண் துறை செயல்படுத்தும் திட்டங்களில் பயன்பெற, விவசாயிகள் தனித் துவ அடையாள எண் அவசியம் என்றும் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான சமச்சீர் உரங்கள் மட்டுமே இட்டு, உரச்செலவைக் குறைத்து மண் வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் விளக்கினார். கிரீடு வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன், நிலக்கடலை சாகுபடியில் டிரைக்கோ டெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்தல், தரமான

மணிகளைப் பெற ஜிப்சம் இடுதல், பயிர் வறட்சியைத் தாங்கி வளர்ந்து 20 சதம் கூடுதல் மகசூல் பெற உதவும் 'நிலக்கடலை ரிச்' எனும் வளர்ச்சி ஊக்கியை பூக்கும் மற்றும் விழுது இறங்கும் பருவங்களில் தெளிக்கும் முறைகள் குறித்து விளக்கினார்.

அங்கக உரங்களான பஞ்சகாவ்யம், மண்புழு மக்கு உரம், மீன் அமிலக் கரைசல், ஐந்திலை கரைசல், இயற்கை பூச்சி விரட்டி ஆகியவற்றை தயாரித்து பயிர்களுக்கு பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார்.

எள் சாகுபடியில் உயிர் உரங்கள் பயன்பாடு, மாங்கனீசு சல்பேட் நுண்சத்து இடுதல் குறித்தும் விளக்கினார். எள் சாகுபடியில் மகசூலை குறைக்கும் எள் மலர் மாற்று நோய் (Phyllody) கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் கோடை உழவு செய்தலின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ்குமார், உழவன் செயலி பதிவிறக்கம் செய்து இடுபொருட்கள் முன்பதிவு செய்யும் முறைகள் குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆரோக்கியராஜ் பிரதம மந்திரி கவுரவ நிதி உதவி திட்ட பயனாளிகள் தொடர்ந்து பயன்பெற செய்ய வேண்டிய ஆதார் புதுப்பித்தல் போன்ற அவசிய செயல்பாடுகள் குறித்தும் விளக்கி நன்றி கூறினார். பயிற்சியில் வீரசோழபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# யூரியா மற்றும் டிஏபி உரங்களை ஆதார் எண், தொலைபேசி எண் உடன் பில் போட்டு விற்பனை செய்ய வேண்டும்

அரியலூர், மே 27

யூரியா மற்றும் டிஏபி உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் போது கண்டிப்பாக ஆதார் எண் மற்றும் அவர் களின் தொலைபேசி எண் உடன் பில் போட்டு விற்பனை செய்ய வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு தெரிவித்தார்.



அரியலூர் வட்டாரத்தில் ஆர் விருத்தாசலம் உர விற்பனை நிலையத்தை வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆய்வு ஆய்வு செய்தார்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வேளாண்மை இயக்குனர், வேளாண்மை துணை இயக்குனர் (உரம்) ஆகியோரின் உத்தரவுப்படி அரியலூர் வட்டாரத்தில் தனியார் உரம் விற்பனை நிலையத்தை வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார். ஆய்வின் போது, மத்திய அரசால் விவசாயி களுக்காக உரங்களுக்கான மானியங்கள் மிக அதிக அளவில் யூரியா மற்றும் டிஏபிக்கு உரங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே விவசாயிகளுக்கு யூரியா மற்றும் டிஏபி உரங்களை அவர்களின் நிலத்திற்கு ஏற்ப மட்டுமே வழங்க வேண்டும், அதிக அளவு விற்பனை செய்யக் கூடாது, விற்பனை செய்யும் போது கண்டிப்பாக ஆதார் எண்ணுடன் பி ஓ எஸ் இயந்திரம் மூலம் பில் போடுவதுடன் கண்டிப்பாக ஸ்டாக் புக் மற்றும் விற்பனை ரசீதில் விவசாயிகளின் பெயர் மற்றும் தொலைபேசி எண்கள் இடம்பெற வேண்டும் என உர விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதேபோல் விவசாயிகள் எப்போதும் அனைத்து பயிர் களுக்கும் ஒருங்கிணைந்த உர மேலாண்மையில் கடைபிடிக்க வேண்டும். சாகுபடி செய்வதற்கு முன் மண் மாதிரி எடுத்து அதன் ஆய்வு அறிக்கை படி கிடைக்கக்கூடிய அனைத்து வகையான

தொழு உரங்கள், பசுந்தால் பயிர், பசுந்தலைப்பயிர், பயிர் வகை பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்தல், அசோலா மற்றும் நீல பச்சை பாசியை பயன்படுத்துதல், அனைத்து வகை யான உயிர் உரங்கள் மற்றும் அனைத்து வகையான நுண்ணூ யூட்ட உரங் களுடன், பரிந்துரைக்கப்பட்ட உரங்களை எப்போதும் பயிர்களுக்கு அதன் வளர்ச்சி பருவங்களுக்கு ஏற்ப, சமச்சீர் வகையில் பயன் படுத்த வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது உரங்களை விற்பனை நிலையத்தில் பெற்ற பிறகு வேறு ஒரு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு இருப்பதை அறிந் தால் உடனடியாக உரிமைத்தை ரத்து செய்வதலுடன் அத்தியா வசிய பொருள் தடைச்சட்டம் 1955 இன் படி உரிய நடவடிக்கை எடுக்கப் படும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், உரங்களின் அதிகபட்ச விலை மாற்றப்பட்டிருந்தால், புதிதாக வரும் உரம் மூட்டை களை தனியாக பராமரிக்க வேண்டும். பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும் உரம் முட்டையில் அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது, என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக் கூடாது. அடி உரமாக பயன் படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப் ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன் படுத்தக்கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும்.

அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிகளவு விவசாயிக்கு வழங்க வேண்டாம் பயிரின் அளவிற்கு தகுந்தார் போல் அடி உரமாக பயன்படுத்தலாம் யூரியா மற்றும் டிஏபிக்கு பதிலாக யூரியா, நானோ டி ஏ பி பயன்படுத்த விவசாயிகளுக்கு எடுத்து கூற வேண்டும். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும் ,அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன் படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.


ஜெயின்
நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396